
டோனி அலமோ கிறிஸ்தவ ஊழியங்கள்

உலக செய்தி மடல்




புதிய எருசலேம் உலகளாவிய திருச்சபைகள்

போதகர் டோனி அலமோ | அலமோ கிறிஸ்தவ மண்டலம் | தொகுதி 06000

*போதகர் டோனி அலமோ – புகைப்படம் 1986*

# டோனி அலமோவின் சாட்சி

## உலர்ந்த எலும்புகள்

டோனி அலமோ

பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி எசேக்கியேலுக்கு, தேவனிடமிருந்து ஒரு தரிசனம் அனுப்பப்பட்டது. அவர் இஸ்ரவேல் மற்றும் உலகத்தின் ஆவிக்குரிய உயிரற்ற தன்மையைக் குறிக்கிறதான உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கைப் பார்த்தார். கிறிஸ்துவின் முதலாம் வருகை, சுவிசேஷத்தைக் குறித்த அவருடைய பிரசங்கம், மற்றும் அதன் விளைவாக "தேவனுடைய வார்த்தையை"1 விசுவாசிக்கிற யாவருக்கும் மரணத்திலிருந்து முதலாம் உயிர்த்தெழுதல் வாயிலாக் கிடைக்கும் நித்திய வாழ்வு போன்றவற்றை இந்தத் தரிசனம் முன்னறிவித்தது.

கர்த்தர் எசேக்கியேலிடம் கேட்டார், "மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா? (ஆவிக்குரியவற்றில் மரித்தவர்கள் உயிரடைவார்களா?) எசேக்கியேல் சொன்னார், "தேவரீர், அவைகளை உண்டாக்கிய நீரே அதை அறிவீர்."[2]

கர்த்தர் மீண்டும் தீர்க்கதரிசியிடம் பேசிச் சொன்னது, "நீ இந்த எலும்புகளைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளைப் பார்த்துச் சொல்ல வேண்டியது என்னவென்றால், உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தைகளைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன்அப்பொழுது உயிரடைவீர்கள் என்றார்."[3]

இஸ்ரவேல் முற்றிலும் ஒரு செத்த தேசமாகிவிட்டது என்பது இஸ்ரவேலுக்குத் தெரியும்.[4] இந்த நாட்களில் அவர்கள் நம்பிக்கையற்று, பிரிந்து காணப்படுகிறார்கள். பாவத்தை நிறுத்திக்கொள்ளாத இஸ்ரவேலை விட, வல்லமைமிக்க ஒரு நாட்டை எழுப்பப்போவதாக, தேவன் எசேக்கியேலிடம் சொன்னார். உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தின் மக்களும் இரண்டாம் இஸ்ரவேலாக இருப்பார்கள்,[5] தேர்ந்தெடுக்கப்பட்ட யூதர்களில் மீந்திருக்கிறவர்களும், ஒரு கூட்ட புறஜாதியாரும், மெய்யான திராட்சைக் கொடியோடு (கிறிஸ்துவோடு)[6] இணைக்கப்பட்டிருக்கிறார்கள். அது பாவத்தின் மரண வாழ்விலிருந்து நித்திய வாழ்விற்கு எழுப்பப்பட்டவர்களின் மாபெரும் பரிசுத்த தேசமாகக் காணப்படும்.[7] அவர்கள் ஒருக்காலமும் தேவனுக்கு விரோதமாகப் பிரியமாட்டார்கள். கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமை மூலமாக இது முதலாம் உயிர்த்தெழுதலாக இருக்கிறது.[8]

1964-ல்,கிறிஸ்து வாயிலான எனது முதல் உயிர்த்தெழுதலுக்கு முன்பு (இரட்சிப்பு), பெர்னி ஹோஃப்மேனாகிய நான் மற்றும் டோனி அலமோவாக அறியப்பட்ட நான் பாவம் செய்வதிலும் தெய்வீகமற்ற தன்மைக்கும் பெயர் போனவனாக இருந்தேன் மேலும் தேவனைக் குறித்த அறிவு முற்றிலும் இல்லாதவனாகக் காணப்பட்டேன். தேவன் ஜீவிக்கிறார் என்ற எந்த ஒரு சிந்தனையையும் நான் கொண்டிருக்கவில்லை. தேவனுடைய வார்த்தை எனக்கு கட்டுக்கதையாகவும் புராணக்கதையாகவும் இருந்தது, மேலும் ஜனங்கள் தேவனையும் அவருடைய குமாரனையும் எவ்வாறு விசுவாசிக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாதவனாக இருந்தேன். தேவனை விசுவாசிக்கிறேன் என்று சொல்பவர்களை என்னால் நம்ப முடியவில்லை, ஏனென்றால் அவர்கள் மாயக்காரர்களாக இருந்தார்கள். அவர்கள் என்னைப் போல, அல்லது என்னை விட மிகவும் பாவம் செய்தார்கள். எனக்குத் தெரியும், எப்படியென்றால் நான் அவர்களோடு வலம் வருவது உண்டு. நாங்கள் எல்லோரும் ஒரு குவியலான மரித்த உலர்ந்த எலும்புகளாயிருந்தோம். என்னை யாராவது கிறிஸ்தவத்திற்கு மாற்ற முயற்சித்தால் நான் மிகுந்த கோபமடைவேன், ஏனென்றால் என்னைப் பொறுத்த வரை பரிசுத்த வேதாகமம் என்பது நேரத்தை வீணடிக்கும் செயலாக இருந்தது. நான் வாழ்ந்த வாழ்க்கை, விசித்திரக் கதைகளுக்கும் தேவையில்லாத செயலுக்கும் நேரம் கொடுக்கவில்லை.

விற்பனைத்துறையிலே நான் நம்பர் 1 ஆகக் கருதப்பட்டேன். உலகப் பிரசித்தி பெற்ற பாடகர்கள் மற்றும் நடிகர்களின் வெற்றிகரமான வாழ்க்கைக்கும், மேலும் நன்கு அறியப்பட்ட வீட்டுத் தயாரிப்புகளின் வெற்றிகரமான தொழில் அபிவிருத்திக்கும் நான் பொறுப்பாக இருந்தேன். நான் மனம் மாறி, இயேசுவைப் பற்றிய சுவிசேஷ துண்டு பிரசுரங்களைப் பணித்தளங்களில் வசித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து

*(பக்கம் 2 ல் தொடர்கிறது)*

**1** எசேக். 36: 1,4 **2** எசேக். 37:3, மூலம் எபிரேய எபி. **3** எசேக். 37:4-5, மூலம். அராமிக் **4** எசேக். 37:11 **5** ஆதி. 17:4-16, 22:18, 26:4, 46:3, 48:19, 49:10, யாத். 19:6, 32:10, சங். 22:27, ஏசா. 2:2, யோவான் 11:51-52, அப். 10:34-35, எபி. 1:10, எபே. 8:8-12, 1பேதுரு 2:9-10, வெளி. 5:9, 14:6 மேலும் பல **6** யோவான் 15:1, ரோமர் 11:17,19,23,24, வெளி. 7:4 **7** 1பேதுரு 2:9 **8** ரோமர் 15:12, 1கொரி. 15:15,16, கொலோ. 2:12, 3:1, 1தெச. 4:16, வெளி. 20:5-6,

## டோனி அலமோவின் சாட்சி

*(பக்கம் 1 லிருந்து தொடர்கிறது)*

மற்றும் பசியுற்ற ஜனங்களைப் போஷிப்பதற்காக சாப்பாட்டுப் பந்திகளை ஒழுங்கு செய்வது போன்ற ஒன்றே, அப்பொழுது என்னுடைய மோசமான கனவாக இருந்தது.

அறுபதுகளின் மத்தியில் உலகம் எனக்கு மிகவும் நன்றாகத் தோன்றவில்லை. நான் போதையை விரும்பவில்லை அல்லது பன்றியின் ஒழுக்கத்தைக் கொண்டிருக்கிற அசுத்தமான மக்களை விரும்பவில்லை. ஹிப்பி இயக்கமானது ஹாலிவுட்டிற்கும் சன்செட் ஸ்ட்ரைபிற்கும் மற்றும் உலகத்திற்கும் செய்து கொண்டிருந்ததை நான் வெறுத்தேன். என்னைப் பொறுத்த வரை நான் ஒரு புனிதனாக இல்லை. மக்கள் பாவம் செய்வதை அவர்கள் குழந்தைகளோடு குடும்பங்களுக்கு முன்பு காண்பிக்காத வரை நான் உண்மையிலேயே அதை ஒரு பொருட்டாகக் கருதவில்லை. என்னைப் பொறுத்த வரை உலகம் முடிந்துபோய் விட்டது, மரித்து விட்டது, உலர்ந்துபோய் விட்டது, அருவருப்பாகி விட்ட, து மற்றும் இருண்டுபோய்விட்டது.[9] உண்மையில் இனி எதற்கும் எந்த மதிப்பும் இல்லை. உலகத்தின் பிற ஜனங்களுக்கும் எனக்குத் தெரிந்தது போலவே அவர்களுக்கும் தெரியும் என நம்பினேன், மேலும் அதனுடைய உண்மைத் தன்மையிலிருந்து தப்பித்துக்கொள்ள போதையையெடுத்தார்கள். திருச்சபைகள் போலியாக இருந்தன; ஒவ்வொருவருக்கும் இதுவும் தெரியும் என்று தோன்றியது. முழு உலகமும் அதனுடைய பாவங்களினாலும் மீறுதல்களினாலும் மரித்துப்போய் காணப்பட்டது. எசேக்கியேல் பார்த்ததைப் போலவே உலகமானது உலர்ந்த எலும்புகளின் மாபெரும் பள்ளத்தாக்காக இருந்தது.[11]

பீவர்லி ஹில்ஸ் அலுவலகத்தில் நான் இயேசுவை தெய்வீகமான விதத்திலே சந்தித்தேன். நான் எவ்வாறு பயமுற்றிருந்தேன்! மற்றும் தேவன் தானும் அவருடைய குமாரனும் ஜீவிக்கிறார்கள் என்பதை என்னிடத்தில் நிரூபிக்கும் போது நான் எவ்வளவு சந்தோஷமாகக் காணப்பட்டேன் என்பதையும் கற்பனை செய்யக்கூட ஒருவருக்கும் சாத்தியம் இல்லை. நான் அவருடைய அற்புதமான பரிசுத்த ஆவியை அனுபவிக்கும் போதும் மற்றும் அவருடைய வல்லமைமிக்க வார்த்தை என்னுடைய சரீரத்தின் ஒவ்வொரு பகுதிக்குள்ளும் நான் ஒரு வடிகட்டி என்பது போல முன்னும் பின்னும் செல்வதைக் கேட்கும் போதும் நான் மெய்சிலிர்த்துப் போனேன். அவருடைய பிரசன்னம் மகிமையுள்ளதாகவும் அனலுள்ளதாகவும் இருந்தது. அவருடைய ஆவி கர்த்தருடைய கரத்தின் வல்லமைமிக்க பிடிப்பு போல என் மீது பலமாய் அழுத்தியது. “எழுந்து நின்று அறையிலுள்ள ஜனங்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றியும் அவர் பூமிக்கு மீண்டும் வருகிறார் என்பதையும் அறிவி; அல்லது நீ நிச்சயமாகவே சாவாய்.” என்று அவருடைய வார்த்தைகள் என்னிடம் சொன்னது. அவருடைய ஆவி, அலுவலகத்திற்கு வந்து என் மீது இறங்கிய போது, வார்த்தைகளால் விவரிக்க முடியாத நம்ப முடியாத அவருடைய அறிவாற்றலைக் குறித்த விழிப்புணர்வு எனக்கு அருளப்பட்டது.[12] அவரே ஒவ்வொரு அணுவாகவும் மற்றொரு மூலக்கூறாகவும் இருந்தார். அவர் காற்றாய் இருந்தார். கடந்த காலத்திலுள்ளவைகள் எல்லாம் அவருக்குத் தெரியும், மற்றும் எதிர்காலத்தில் நடக்க இருக்கும் எல்லாவற்றையும் அவர் அறிவார்.[13] நான் மனக்கலக்கமுற்றேன். ஏனென்றால் நான் செய்த எல்லாவற்றையும் அவர் அறிவார் என்பதை நான் அறிந்தேன். அதன்பின் பரலோகமும் நரகமும் உண்மையாகவே இருப்பதை அவர் எனக்குக் காண்பித்தார். அவர் சொன்னதை நான் செய்யவில்லையென்றால் நான் எங்கே செல்வேன் என்பதை நான் அறிந்தேன்... அது பரலோகமாக இருக்காது.

அது எனக்குப் பயமுறுத்துவதாக இருந்தாலும்,[14] தேவன் மெய்யாகவே இருக்கிறார். ஜீவனுள்ளவராக இருக்கிறார். மற்றும் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் அவர் இருந்தார் என்பதைச் சொல்வதையும் அறிந்துகொள்வது அற்புதமானதாக இருந்தது. அவர் வானத்தையும் பூமியையும் மற்றும் அதிலுள்ள எல்லாவற்றையும் படைத்த நாளிலிருந்து அவர் கொஞ்சம்கூட மாறவே இல்லை.[15] நான் எப்பொழுதும் அவருக்குப் பயந்து, போற்றி, துதித்து, மதித்து, நேசித்து அவருக்குச் சேவை செய்வேன் என்பதை உடனே தெரிந்து கொண்டேன். நான் பாடுகள் அனுபவித்து அவருக்காக மரிப்பதையும் முழு சந்தோஷத்தோடு அவற்றைச் செய்வதையுமே விரும்புவேன் என்பதையும் அறிந்து கொண்டேன்.[16]

தேவன் என்னை அந்த அலுவலகத்திலிருந்து விடுவித்த பிறகு, நான் அவரிடம் கேட்கத் தொடங்கினேன், “நான் என்ன செய்யவேண்டுமென்று நீர் விரும்புகிறீர்? நீர் சொல்லும் எதையும் நான் செய்வேன்.” நான் எந்தப் பதிலையும் பெறவில்லை, ஆகையால் அவர் என்னை தேவனுடைய ஆலயத்திற்குப் போகச் சொல்கிறார் என்று நினைத்தேன். நான் பெரிதாய் உள்ள சபைகளை நினைத்தது சிறந்ததாய் இருந்தது; எனவே நான் அங்கு சென்றேன், அங்கு நான் அவரைக் காணவில்லை. அதன்பின்பு நான் மற்ற திருச்சபைகளுக்குச் சென்றேன், ஆனால் அவர் அங்கேயும் இல்லை. அதன்பிறகு அட்டைப் படத்தில் ஞானியாகவும் தெய்வீகமாகவும் நீண்ட தாடி மற்றும் ஆன்மீக ஆடையணிந்த நபராகக் காட்சியளித்த புத்தகங்களைப் படித்தேன், ஆனால் அந்தப் புத்தகங்கள் தவறானவை என்பதை அறிந்தேன் ஏனென்றால் தேவனுக்குப் பயப்பட வேண்டியதில்லை[17] என்றும் தேவன் யாரையும் பயமுறுத்தவில்லை என்றும் அதனால் நீங்கள் நரகத்திற்குப் போகாமல் பாவம் செய்யலாம் என்று அவர்கள் சொல்லி இருந்தார்கள்.[18] அப்படிப்பட்ட கடவுளைக் குறித்து நான் கவலைப்படவில்லை; என்னைப் பயமுறுத்தியதாகக் கண்ட தேவனைக் குறித்தும்,[19] எனக்குப் பரலோகத்தையும் நரகத்தையும் காண்பித்த தேவனைக் குறித்தும், யார் ஒருவராலும் என்னைச் செய்ய வைக்க முடியாத நான் ஒருபொழுதும் செய்ய விரும்பாதவற்றைச் செய்ய வைத்த தேவனைக் குறித்தே நான் கவலையுற்றிருந்தேன்.

பரிசுத்த வேதாகமத்தில் உண்மையைக் கண்டறியலாம் என்று நான் ஒருபொழுதும் சிந்தித்ததில்லை, ஏனென்றால் அவைகள் என்னைச் சுற்றிலும் ஏராளமாய் இருந்தது. ஜனங்கள் எல்லோரும் முட்டாள்கள் என்று நான் நம்பினதால் பொது ஜனங்கள் செய்கிற எதுவுமே புத்திசாலித்தனமானதாக இருக்காது என்று நான் நினைத்தேன். முடிவாக, நான் வேதாகமத்தை வாசிக்க ஆரம்பித்து அதிலுள்ள இரட்சிப்பின் திட்டத்தைப் படித்ததினால் கிறிஸ்துவுக்குள் எவ்வாறு வளர வேண்டும் என்பதைச் சொல்கிற நித்திய வாழ்விற்கான போதனைகளையும் கண்டுகொண்டேன் மற்றும் ஆவிக்குரியவிதத்தில் அவருக்காக ஒரு முக்கியமான ஆத்தும ஆதாயம் செய்பவனாக மாற எனக்கு உதவியது.[20]

நான் முதலாவதாக வேதாகமத்தை வாசிக்கத்துவங்கின போது, நான் பீவர்லி ஹில்ஸ் அலுவலகத்தில் எப்படி உணர்ந்தேனோ அதே விதமான கர்த்தருடைய வல்லமை

**9** மத். 13:39, அதி. 24, 1கொரி. 15:24, எபி. 9:26, 1பேதுரு 4:7 **10** எபே. 2:1,5, கொலோ. 2:13 **11** எசேக். 37:1 **12** எண். 24:16, 1சாமு. 2:3, யோபு 21:22, சங். 32:8, நீதி. 2:6, 3:20, 9:10, லூக்கா 1:77, ரோமர் 11:33, 1கொரி. 1:25, 2:16, 3:19, 2கொரி. 4:6 **13** சங். 44:21, 94:11, ஏசா. 46:9-10, 1கொரி. 3:20, 1யோவான் 3:20, வெளி. 21:6, 22:13 **14** ஆதி. 35:5, லேவி. 26:16, யோபு 31:23, எரே. 32:21, எசேக். 32:32, 2கொரி. 5:11 **15** ஆதி. 1:1, மல். 3:6, அப். 4:24, 2கொரி 5:11, எபி. 13:8 **16** சங். 5:11, 35:19, ஏசா. 51:11, 61:10, யோவான் 16:33, அப். 2:28, 20:24, ரோமர் 12:8, 15:13, 2கொரி. 8:12 **17** ஆதி. 22:12, சங். 112:1, நீதி. 13:13, 14:16, 28:14, 31:30, பிரசங். 7:18 **18** நீதி. 8:36, எசேக். 18:2,4, வெளி. 19:20, 20:10,14,15, 21:8 **19** ஆதி. 2:17, 6:7,9,13, யாத். 20:5, 32:33, 34:7, எசேக். 3:18, 18:20, மத். 8:12, 22:13, மாற். 16:16, வெளி. 2:5,16, 22-23, 3:3, 20:15 **20** யோவான் 4:35-36, 15:5, 8, 15-16, வெளி. 14:18

என் மீது ஆட்கொள்வதை உணர்ந்தேன். அதன்பின்பு கர்த்தர் பரலோகத்தையும் நரகத்தையும் குறித்த்தான மற்றொரு தரிசனங்களைக் காண்பித்தார்.[21] நான் கர்த்தரிடம் கதறினேன், “ஆண்டவரே, என்னை நரகத்திற்கு அனுப்பாதேயும்!” அப்பொழுது நான் பரலோகத்தைப் பார்த்து அதனுடைய சமாதானத்தை உணர்ந்தேன்.[22] நான் ஆவிக்குரியவற்றில் குருடாகவும், நிர்வாணியாகவும் மற்றும் சிறியவன் போல் இருந்தபோதிலும், பரலோக சமாதானத்தை நான் என்றென்றைக்கும் உணர முடியுமானால் நான் எப்பொழுதும் குருடாகவும் நிர்வாணியாகவும் முக்கியமற்றவனாகவும் இருப்பதையுமே விரும்புவதாக தேவனிடம் கூறினேன். நான் நரகத்தை மீண்டும் ஒருமுறை கண்டு, இரக்கத்திற்காகவும் மன்னிப்பிற்காகவும் கர்த்தரிடம் மீண்டும் கதறினேன். அப்பொழுது பிதா குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியின் வல்லமை என்னுடைய அழியக்கூடிய சரீரத்திற்குள் நுழைந்தது.[23] இயேசுவின் மீது மற்றும் அவர் எனக்காக அருளிய இரத்தத்தின் மீதான என்னுடைய விசுவாசம், மற்றும் நான் கேட்டுக் கீழ்ப்படிந்த தேவனுடைய வார்த்தையின் மீதான என்னுடைய விசுவாசம் போன்றவற்றால்,[24] நான் செய்த ஒவ்வொரு பாவமும் என்னுடைய ஆத்துமாவை விட்டுப் புறப்படுவதை உணர்ந்தேன்.[25] நான் சுத்தமானவனாகவும் தூய்மையானவனாகவும்உணர்ந்தேன்.[26] மிகவும்அதிசயிக்கத்தக்க ஏதோ என்னிடத்தில் நடந்திருந்தது, மேலும் அது “இஸ்ரவேலின் பரிசுத்தர்” இயேசு கிறிஸ்துவால் எனக்காக செய்யப்பட்டது.[27] பாவத்திலிருந்து விடுதலையாகியிருப்பதிலும் மற்றும் பாவத்திலிருந்து என்னை விலக்கிய அந்தப் புதிய வல்லமையைக் கொண்டிருப்பதிலும் நான் மிகவும் சந்தோஷமாக இருந்தேன் அதையே நான் முழு உலகத்திற்கும் சொல்ல விரும்பினேன் அதனால் அவர்கள் அவரை அறிந்துகொண்டு நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்வார்கள்.

1964-லிருந்து கிறிஸ்துவினுடைய ஊழியத்தில் இருந்த பிறகும், நான் வேதாகமத்தை வாசிக்கிற ஒவ்வொரு நேரமும் பரலோகத்திலிருந்து என்னுடய உலர்ந்த எலும்புகளுக்குள் ஆவிக்குரிய மஜ்ஜை ஊற்றப்படுவதை உணர்கிறேன். ஆவிக்குரிய கவசம் என்னும் தசையாலும் தோலாலும் மூடப்பட்டு அந்த உலர்ந்த எலும்புகளைச் சுற்றிலும் ஆவிக்குரிய தசைநார்கள் தேவனுடைய வார்த்தையால் சூழப்பட்டிருக்கிறது. தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் கிறிஸ்துவை என் இருதயத்திற்குள் அதிகமாக இணைத்துள்ளது. தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையும் என்னுடைய இருதயத்திற்குள் பரிசுத்த ஆவியானவர் சுவாசிப்பதையும் சாத்தானானவன் வருடக்கணக்கில் என் மீது தொடுத்து வந்த அக்கினி அம்புகளை எதிர்த்து நின்று அணைக்கக் கூடிய வல்லமையைக் கொடுத்ததையும் நான் இன்றளவும் உணர முடிகிறது. ஒவ்வொரு நாளும் இயேசு கிறிஸ்துவில் “நாம் வெற்றி வீரனை விட மேலானவர்களாயிருக்கிறோம்,”[28] மற்றும் நாம் “அவரில் முழுமையானவர்களாயிருக்கிறோம்.”[29] “உலகமெங்கிலும் போய், சகல ஜாதியாருக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்”[30] என்று இயேசு மேகங்களில் பரத்திற்கு ஏறிச் செல்வதற்கு முன்பு உரைத்த அவரின் ஒவ்வொரு வார்த்தையையும் பின்பற்றுவது எவ்வளவு முக்கியம் என்பதை நானும் அறிந்திருக்கிறேன். (ஆவிக்குரியவற்றில் மரித்திருக்கிற ஒவ்வொரு உலர்ந்த எலும்புக்கும் பிரசங்கியுங்கள் “ஆகையால் அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்பார்கள்.”[31])

“விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ

*(பக்கம் 8 ல் தொடர்கிறது)*

**21** ஏசா. 5:14, 14:9, லூக் 16:22-31, அப். 7:55-56, வெளி. 4:1-11, 14:10-11, 15:1-4, 20:10, 21:2-5, 10-27, 22:1-5 **22** ரோமர் 5:1, எபே. 2:14, பிலி. 4:7, கொலோ. 3:15, 1தெச. 5:23, 2தெச. 3:16 **23** லேவி. 26:11-12, யோவான் 14:16, 2கொரி. 6:16, 1பேதுரு 2:5, 1யோவான் 3:24 **24** ஆபகூக். 2:4, மத். 17:20, லூக். 7:50, அப். 20:21, 26:18, ரோமர் 1:17, 3:28, 5:2, 10:17, 11:20, கலா. 2:16, 3:11, எபே. 2:8, 3:17, எபி. 10:38 **25** மாற்கு 14:24, யோவான் 6:53, அப். 20:28, ரோமர்3:25, 5:9, எபே. 1:7, 2:13, கொலோ. 1:14, 20, எபி. 9:12,14,22, 1பேதுரு 1:18-19, வெளி. 1:5, 5:9 **26** எபி. 10:19-22, 1யோவான் 1:7, வெளி. 1:5, 7:14

**27** சங்கீதம் 89:18, அப். 3:13-14 **28** ரோமர் 8:37, 1யோவான் 4:3-4 **29** கொலோ. 2:10 **30** மாற்கு 16:15, லூக்கா 14:23 **31** 2இராஜாக்கள் 20:16, ஏசா. 1:10, எரே. 2:4, எசேக். 37:4 **32** மாற்கு 16:16, 2தெச. 2:12 **33** சங். 51:5, ரோமர் 3:10-12, 23



*டோனி அலமோ கிறிஸ்துவ ஊழியங்கள் இணை ஊழியர் எம்.சி. போதகர் அலமோவின் செய்திமடல்களை விநியோகிக்கிறார் – காங்கோவின் ஜனநாயக நாடு*

## தன்சானியா

அன்பான போதகர் அலமோ அவர்களே, தேவன் தந்தருளிய எனது அன்பிற்குரிய போதகரே,

பிதாவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், இரக்கமும், சமாதானமும் உங்கள் மீதும் உங்கள் ஊழியத்தின் மீதும் இருப்பதாக. 1994-லிருந்து நான் ஊழியம் புரிந்த என்னுடைய தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன், நான் தன்சானியாவின் முசோமாவில் சுவிசேஷகனாக இருக்கிறேன். தேசம் முழுவதிலும் மற்றும் தன்சானியாவிற்கு வெளியிலும் என்னுடைய ஊழியத்தை விரிவுபடுத்தும் பணியைச் செய்து கொண்டிருக்கிறேன். போதகரே, நான் உங்களுடைய குரலையோ பிரசங்கத்தையோ கேட்டதில்லை உங்கள் முகத்தையும் பார்த்ததில்லை, ஆனால் உங்கள் எழுத்துப்பணி மூலமாக உலகத்தின் பிரசங்கியாராகிய போதகர் டோனி அலமோவாகிய தாங்கள் எழுதிய “உலர்ந்த எலும்புகள்,” மேசியாவும் “தேவனின் தோட்டமும்” போன்ற அற்புதமான புத்தகங்களைப் பெற்று வாசித்திருக்கிறேன். இந்த புத்தகப் பணிகள் மூலமாக கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிற திருச்சபையைப் பற்றிய உங்களுடைய நிகழ்கால, மற்றும் எதிர்கால அக்கறையை நான் அறிந்து புரிந்துகொண்டேன். நானும் என்னுடைய உடன்பணியாளர்களும் மற்றும் தங்களுடைய புத்தகப் பணி மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புதிய விசுவாசிகள் எல்லோரும் இணைந்து “விசுவாசிகள் சமுதாய திருச்சபை” என்று அழைக்கப்படுகிற ஒரு ஐக்கியத்தை உருவாக்கியிருக்கிறோம். கிழக்கு ஆப்பிரிக்காவில் முக்கியமாக தன்சானியாவில் தங்களுடைய ஊழியத்தை விரிவாக்க விரும்புகிறோம், மேலும் தொன்மையான கிராமங்களுக்குள் முன்னேறிச் சென்று விரிவாக்கவும் விரும்புகிறோம். போதகரே, எங்களுக்குத் தயவாய், உங்களுடைய உதவி தேவைப்படுகிறது. இந்த நற்செய்தி ஊழியம் மற்றும் தேசிய சுவிசேஷ பணியின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒலிபெருக்கிகள், ஒரு மின் இயக்கி (ஜெனரேட்டர்) மற்றும் புதிய விசுவாசிகளுக்கு வேதாகமங்கள் மற்றும் போதனை புத்தகங்கள் வழங்க முடியுமா?. இதன் மூலம் கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசிர்வதிப்பார். தேவன்தாமே உங்களை ஆசிர்வதிப்பாராக மேலும் செய்த நற்காரியங்களுக்காக உங்கள் ஆவிக்குரிய வாழ்வை உயர்த்துவாராக. நாங்கள் உங்களை வாழ்த்துகிறோம் மேலும் உங்கள் நல்ல பதிலுக்காக வாஞ்சையோடு காத்திருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள்,
ஒ.இ.எம். தன்சானியா, கிழக்கு ஆப்பிரிக்கா

## இந்தியா

இந்தியாவின் டோனி அலமோ கிறிஸ்தவ ஊழியத்தின் இந்திய சகோதரனிடமிருந்து வாழ்த்துக்களும் வணக்கங்களும். நான் பரிசுத்த வேதாகமங்களையும் மற்றும் *மேசியா* உட்பட மற்ற சில புத்தகங்களையும் பெற்றபோது நான் சந்தோஷத்துடனும் நன்றியுடனும் காணப்பட்டேன். ஜெபத்துடன், நானும் என்னுடைய கிறிஸ்தவ சகோதரர்களும் ஆங்கிலம் தெரிந்தவர்களிடத்தில் இரட்சிப்பின் மெய்யான திட்டத்தை வழங்கி வருகின்றோம், மேலும் ஆங்கிலம் தெரியாமல் கிராமத்தில் வாழுபவர்களுக்காக இந்த வியத்தகு புத்தகத்தை எங்களுடைய தாய் மொழியிலும் மொழிபெயர்க்க முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். பெரிய மக்கள் கூட்டம், பேருந்து மற்றும் ஆட்டோ ஓட்டுநர்கள், உயர்நிலைப் பள்ளி, மருத்துவ மற்றும் பொறியியல் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் மற்றும் யார் யாரெல்லாம் பெற்றுக்கொண்டார்களோ அவர்கள் இரட்சிப்பின் மெய்யான திட்டத்தைச் சுமந்து செல்கிற இந்தப் புத்தகத்தால் ஆசிர்வதிக்கப்பட்டுக் கெண்டிருக்கிறார்கள். உங்களுடைய புத்தகத்தின் மூலமாக எங்களுடைய நகரத்தில் அநேக மக்கள் இயேசு கிறிஸ்துவை தங்களுடைய சொந்த இரட்சகராகப் பெற்றிருக்கிறார்கள். தயவுகூர்ந்து உங்களுடைய விலையேறப்பெற்ற ஜெபத்தால் எங்களுடைய ஊழியத்தை தாங்குங்கள். மரியாதையுடன், அவருடைய திராட்சைத் தோட்டத்தில் உங்களுடைய ஊழியக்காரன்.

தங்கள் உண்மையுள்ள,

போதகர் என். றி. ரம்பாசோதாவரம் மண்டல் இந்தியா



*சகோதரர் டி.ஆர். போதகர் டோனி அலமோ அவர்களுடைய வல்லமைவாய்ந்த ஆத்தும ஆதாய புத்தகம் மேசியா வை விநியோகிக்கிறார் – ராஜமுந்திரி, இந்தியா*

பாஸ்டர் அலமோவின் புத்தகமான *மேசியாவிலிருந்து* ஒரு பகுதி.

தேவனின் மிகச் சிறந்த அற்புதங்கள் அச்சடிப்பில் உள்ளது: பதிவு

# மேசியாவின் சரித்திரம்

## வேதாகம தீர்க்கதரிசனத்தின் படி

**"தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள்" (அப் 10: 43).**

**"புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது" (சங்கீதம் 40:7, எபிரெயர் 10:7).**

(B) ஏசாயா 53

**(9) நமக்காக பட்ட மேசியாவின் பாடுகள், ஏசாயா 53:4-6, 10-12:**

"மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்... நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டார்: நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்... கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்...என் ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்...அவருடைய ஆத்துமா தன்னை பாவத்திற்கு குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கிறது." "அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார்...அநேகருடைய பாவத்தை தாமே சுமந்தார்."[1]

**மேசியாவின் பிறர் பரிகாரப்பலிக்கான பாடுகளே** இந்த அதிகாரத்தின் பிரதான உண்மையாயிருக்கிறது. இந்த அற்புதமான அதிகாரம் பன்னிரெண்டு வசனங்களை மட்டுமே கொண்டிருக்கிறது, இருப்பினும் ஒட்டுமொத்த மனுக்குலத்தின் பாவத்திற்குப் பரிகார பலியான கோட்பாட்டை பதினான்கு முறை அறிவிக்கிறது. முழுப் பிரிவும் (ஏசாயா 52:13-53:12) இந்தக் கருத்துகளால் நிரம்பி வழிகிறது, மேலும் கர்த்தராகிய இயேசு "நமக்காக பாவமாகினார்" (2 கொரி. 5:21) மற்றும் "நம்முடைய பாவங்களுக்காக மரிக்கும்" (1கொரி. 15:3) வரை இந்தப் புதிர் தீர்க்கப்படாமலே இருந்தது.

யேகோவா "நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்" (ஏசாயா 53:6). மனுக்குலத்தின் மீது விழுந்திருக்க வேண்டிய நீயாயத்தீர்ப்பின் கோபாக்கினை அவர் மீது விழுந்த தெய்வீக மீட்பராக இருக்கிறார் மேசியா. கிறிஸ்துவின் பதிலாள் பரிகாரம் வாயிலான தேவனுடைய கிருபை எவ்வளவு அதிசயமாயிருக்கிறது! எனவே சிலுவையானது ஒரே நேரத்தில் கிறிஸ்துவினுடைய ஆழ்ந்த அவமானமாயிற்று, எனினும் மனிதனுக்கு இரட்சிப்பைக் கொண்டுவருவதற்கு நியமிக்கப்பட்ட ஒரே வழி. ஆயினும் அவருடைய மிக உயர்ந்த மகிமையாயிருக்கிறது.

கர்த்தராகிய இயேசு பூமியில் வந்த பொழுது, சிலுவையில் பாவத்திற்காக அவர் பரிகாரம் செய்ததன் மூலமாக மேசியாவைக் குறித்த இந்த தீர்க்கதரிசனங்களை அவர் நிறைவேற்றினார்: "அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்" (1பேதுரு 2:24).

**(10) விருப்பத்துடனும் முறுமுறுக்காமலும் மேசியா பாடுபடுவார், ஏசாயா 53:7:**

"அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை: அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்."

பாடனுபவிக்கிற மற்றவர்கள் குறிப்பாக அவர்கள் அநீதியாக நடத்தப்படும்பொழுது முறுமுறுப்பையும் முறையிடுதலையும் பொதுவாகமேற்கொள்வர்– ஆனால் பாடுபட்ட மேசியா அப்படியிருக்கவில்லை. "நம்முடைய பாவங்களைச் சுமப்பதற்கு" அவருக்கு நியமிக்கப்பட்ட கடமையில் தானே முன்வந்து தன்னையே ஒப்புக்கொடுத்து அடிக்கப்படுவதற்குச் செல்லும் ஆட்டுக்குட்டி போலானார். அவருடைய மேலான பரந்த அமைதியில் மேசியா மிகவும் அதிகமான பாடுகளைச்சகித்தார், ஏனென்றால் யேகோவா அதையே விரும்பினார். எல்லையில்லா அன்பின் ஆழங்காணமுடியாத இரகசியத்தை நாம் இங்கே பார்ப்போம்.

புதிய ஏற்பாட்டில், கிறிஸ்துவாகிய இயேசுவானவர் அடிக்கப்பட்டு, பொய்யாகக் குற்றம்சாட்டப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, பரிகாசம் செய்யப்பட்டு, உமிழப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டு, முரட்டுத்தனமாக இழுக்கப்பட்டு சாட்டையால் அடிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்ட போது, அவருடைய கொலையாளிகளுக்கு எதிராக எந்தவித மனக்கசப்பின் உணர்வும் கொண்டிருக்கவில்லை, நிந்திக்கவுமில்லை, அவர் ஒரு போதும் குறை கூறவுமில்லை, ஆனால் அவர்களுக்காக ஜெபித்தார். அவருக்கு எதிராக அநேக பொய்ச்சாட்சிகள் தோன்றிய பிறகு, பிரதான ஆசாரியன் கேட்டான், "நீ ஒன்றும் சொல்லுகிறதில்லையா?... ஆனால் இயேசுவோ

1 தெய்வீகப் படைப்பாற்றல் வேதாகமத்தில் தேவன் நம்முடைய பாவத்திற்கான பரிகாரி என்ற கருத்தை அனேக இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். அதனால் ஒரு இடத்தில் அதனை அழிக்க நினைக்கிரவர்களை மற்றொன்றில் அதைச் சந்திக்க கட்டாயப்படுத்தப்படுகிறார்.




*போதகர் மைக் ஒமோசேகன் அவருடைய சில கூட்டத்தாரோடு போதகர் டோனி அல்மோ அவர்களுடைய ஆத்தும ஆதாய புத்தகங்களையும் மற்றும் கிங் ஜேம்ஸ் பதிப்பு வேதாகமங்களையும் டோனி அலமோ கிறிஸ்துவ ஊழியங்களிலிருந்து பெற்றுக்கொள்கிறார்கள்- சுலேஜா, நைஜீரியா*

## எங்களுடைய இருபத்துநான்கு மணிநேர ஜெப குழு மற்றும் தகவல் இணைப்பிலிருந்து:

கலிஃபோர்னியாவின் பாஸடோனாவிலுள்ள ஃபுல்லர் இறையியல் கல்லூரியின் மெக்அலிஸ்டர் நூலகத்திலிருந்து டி.ஆர். என்னை அழைத்துச் சொன்னது என்னவென்றால் அவர் செய்திமடல்கள் சிலவற்றைக் கீழே கண்டெடுத்து படித்தாராம். அவர் அவைகளை விரும்பியதாகச் சொன்னார் மேலும் அஞ்சல் பட்டியலில் அவரும் இடம்பெறும்படியாகக் கேட்டுக்கொண்டார். போதகர் அலமோ அவர்கள் எழுதிய ஒவ்வொரு செய்திமடலையும் மற்றும் அவருடைய பிற படைப்புகள் ஒவ்வொன்றையும் நாங்கள் அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். போதகர் அலமோவினுடைய புத்தகங்களின் ஒரு சேகரிப்பைக் கொண்டிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார் அதன் மூலம் அவருடைய நூலகத்திற்கு வருகிற ஆராய்ச்சியாளர்கள் தேவனையும் போதகர் அலமோ அவர்களையும் அதிகப்படியாக தெரிந்துகொள்வார்கள். இது குறித்த அவர் மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்டார். அவருடைய புத்தக அலமாரியில் ஒன்றை முழுவதுமாக போதகர் அலமோ அவர்களின் புத்தகத்தால் நிரப்ப விரும்புவதாகச் சொன்னார். போதகர் அலமோ சொல்லுகிறபடியே சத்தியத்தின் படியே அது இருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

பேசாமலிருந்தார்" (மத். 26:59-63).

சிலுவையில் அறையும்போதுள்ள சித்தரவதைகளின் பாடனுபவிக்கும்பொழுதுள்ள இயேசுவின் ஜெபம் இங்கே இருக்கிறது: "பிதாவே, இவர்களுக்கு மன்னியும்; தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக்கா 23:34).

இந்த முழுச் செயல்முறையும் மிகவும் அசாதாரணமானதாக இருக்கிறது, இயற்கைக்கும் மனித அனுபவத்திறகும் மிகவும் முரண்பட்டது, ஆனால் விநோதமான தீர்க்கதரிசனத்தால் அதிர்ச்சியுற்றும் திகைப்புற்றுமிருக்கிறது. மேலும் அது இன்னும் அதிகமான குறிப்பிடத்தக்க நிறைவேறுதலாக இருக்கிறது.

**(11) சிறையிலும் நியாயத்தீர்ப்பிலிருமிருந்து அவர் எடுக்கப்படும்பொழுது, மேசியா அவருடைய வழக்கிற்காக வாதாடுவதற்கு எந்த வழக்கறிஞரையும் அவருடைய குற்றமின்மையை அறிவிக்க எந்த சிநேகிதனையும் கொண்டு இருக்கமாட்டார், ஏசாயா 53:8:**

"சிறையிலும் நியாயத்தீர்ப்பிலிருந்தும் அவர் எடுக்கப்பட்டார்; அவருடைய வம்சத்தை யாரால் சொல்ல முடியும்?"

ஆயக்காரர்கள்வழக்குவிசாரணையில்குற்றம்சாட்டப்பட்டவருக்கு ஆதரவாக எதையாவது தெரிந்துவைத்திருக்கிறவர்களை வரவழைத்து அதை அறிவிக்க வைப்பதை நியாயசங்கம் வழக்கமாகக் கொண்டிருந்தது. இது நாசரேத் என்னும்ஊரில் நடந்த இயேசுவின் விசாரணையில் இது கடைபிடிக்கப்படவில்லை, மாறாக, நியாயசங்கத்திற்கு முன்பாக அவசரமான நடவடிக்கை, போலியான விசாரணை, இவைகள் அவர்களுடைய சொந்த விதிமுறைகளும் நியாயமான நேர்மையான அனைத்து நியமங்களுக்கும் எதிரான அப்பட்டமான முரண்பாடாக இருந்தது.

சீர்கெட்ட யூதத் தலைமைக்குரு மற்றும் அந்த நேரத்தில் பூமியிலே வல்லமையுள்ள புறஜாதி சக்தியின் பிரதிநிதிகளாக இருந்தவர்களுக்கு முன்பாக இயேசுவானவர் தனியாகவும் எதிர்க்கமுடியாமலும் நிற்க வேண்டியதாயிருந்தது. **அவருடைய காரியத்தில் பங்கெடுக்க யாரும் இருக்கவில்லை.** யூதாஸ் அவரைக் காட்டிக் கொடுத்தான்; பேதுரு ஆணையிட்டும் அவரை மறுதலித்தான்; மேலும் மற்ற சீடர்கள் "அவரைக் கைவிட்டு ஓடினார்கள்" (மத் 26:56). அவருடைய ஊழியத்தில் அவருக்கு ஊழியம் செய்த அநேக ஸ்திரிகள், அவர் சிலுவையில் அறையப்படும்போது "தூரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருந்தார்கள்" (மத். 27:55). உண்மையாகக் கூற வேண்டும் என்றால் அவருக்கு பெரிதும் தேவைப்படுகிற நேரத்தில் அவருக்காக பேச ஒருவர் கூட அவர் அருகில் நிற்கவில்லை. உண்மையாகவே, பின்னர், பாடுகளினால் அவருடைய உடைந்து போனசரீரத்தை மரத்துப்போகச் செய்த பிறகு, அவருடைய தாயார் மரியாளும் சில விசுவாச பெண்மணிகளும் மற்றும் அவருடைய அன்பிற்குரிய சீடர் யோவானும் சிலுவைக்கு அருகில் நின்றார்கள்; ஆனால்அவருடையவிசாரனையிலும்மற்றும்சிலுவையிலறைவதற்கு அந்தத் தருணத்திலும் மற்றும் முந்தைய மணித்துளிகளிலும், அவர் தனித்து முற்றிலுமாக தனித்து விடப்பட்டிருந்தார். உலக வரலாற்றில் இயேசுவைப் போல நண்பர்களாலும் நேசிக்கப்பட்டவர்களாலும் முற்றிலுமாக கைவிடப்பட்டவர் யாருமில்லை.

இயேசு கைது செய்யப்பட்டார், தகுந்த அதிகாரிகளால் அல்ல, ஆனால் ஒரு கோபமுற்ற ஜனக்கூட்டத்தால் : "பிரதான ஆசாரியரும் ஜனத்தின் மூப்பரும் அனுப்பின திரளான ஜனங்கள் பட்டயங்களையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு வந்தார்கள்" (மத். 26:47). அவர்களுடைய அணுகுமுறையின் முரண்பாடு குறித்து இயேசுவும் சுட்டிக் காட்டினார். "கள்ளனைப் பிடிக்கப் புறப்படுகிறது போல, நீங்கள் பட்டயங்களையும் தடிகளையும் எடுத்துக்கொண்டு என்னை பிடிக்கவந்தீர்கள்; நான் தினந்தோறும் உங்கள் நடுவிலே உட்கார்ந்து தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்பொழுது நீங்கள் என்னைப் பிடிக்கவில்லையே. ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது என்றார்" (மத். 26:55-56).

"அவரைக் கொலை செய்யும்படிக்கு" (மத். 26:59) அவருக்கு விரோதமாய் பொய்ச்சாட்சிகள் ஏவிவிடப்பட்டார்கள், இரவிலேயே அவர் முயற்சி செய்யப்பட்டார் அது சட்டவிரோதமாயிருக்கிறது.

ரோமஅவையிலே, பிலாத்து அவருக்கு நீதியாய் தீர்ப்பிட ஒரு முகாந்தரத்தை விருதாவாய் தேடி மக்களிடத்தில் கேட்டார், "என்ன பொல்லாப்பு செய்தான்?" அவர் பெற்ற ஒரே பதில் தலைவர்களால் தூண்டிவிடப்பட்ட கூட்டத்தினருடைய காரணமற்ற கூச்சலாயிருந்தது, "அவனைச் சிலுவையில் அறைய வேண்டும்... அவனைச் சிலுவையில் அறைய வேண்டும்" (மத். 27:23). அதன்பின், கலகம் அதிகமாகிறதேயல்லாமல் தன் முயற்சியிலே பிரயோஜனமில்லையென்று பிலாத்து கண்டு, அந்தக் காரியத்திலே அவனுடைய கைகளை கழுவி இயேசுவை சிலுவையில் அறையும்படிக்கு அவரை அவர்களிடம் ஒப்படைத்தான் (மத். 27:22-26). வரலாற்றுக் குறிப்பேட்டில் இதுவே நீதியின் படு மோசமான தோல்வியாக இருக்கிறது.

ஆனால் கிறிஸ்துவின் பாவமில்லாத தன்மையை – "நான் இவரிடத்தில் ஒரு குற்றமும் காணேன்" (யோவான் 19:6) – என்று பிலாத்துவால் மட்டும் சாட்சியிடப்படாமல், மற்றும் மேசியாவைப்பற்றிய பழைய தீர்க்கதரிசியாலும் சாட்சியிடப்பட்டிருக்கிறது: "அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை" (ஏசா. 53:9).

*செய்திமடல் பாகம் 061000 ல் தொடர்கிறது*

## சாம்பியா

அன்பான போதகர் டோனி அலமோ அவர்களே,

இந்தக் கடிதத்தை எழுதுவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி இருக்கிறீர்கள், போதகர் அவர்களே? சர்வ வல்லமையுள்ள தேவனின் கிருபையினால் நீங்கள் நன்றாய் இருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். “தலைவர்களும் கட்டுக்கதைகளும்” என்ற தங்களுடைய உலக செய்திமடலை வாசித்தேன். எனக்கு அதை அற்புதமாகக் கடந்து வர தேவன் அனுமதித்தார். அதை வாசித்த பிறகு, நான் மிகவும் ஆசிர்வதிக்கப்பட்டேன் மற்றும் உங்களுக்கு எழுத விரும்பினேன். காணாமல் போன மற்றும் இரட்சிக்கப்படாதவர்கள் வாழ்வில் கிறிஸ்து உருவாகும்படியாக அற்புதமான செய்திகளைச் சென்று சேர்ப்பதற்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். உங்கள் புத்தகங்கள் மூலமாக அநேக ஜனங்கள் இயேசுவை அடைந்திருக்கிறார்கள் மற்றும் பிசாசிடமிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். கர்த்தர்தாமே உங்களை பொருளாதாரத்திலும் சரீரத்திலும் ஆவிக்குரியவற்றிலும் ஆசிர்வதிப்பாராக.

போதகரே, நான் ஒரு இளம் பெண்மணி, ஐந்து வருடங்களுக்கு முன்பு எனக்குத் திருமணமாகியது. நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு எனது வாழ்வை இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைத்தேன், மேலும் கர்த்தர் என்னிடத்தில் கிருபையாயிருக்கிறார். இயேசுவைப் பற்றிய மெய்யான நற்செய்தியைப் பிறருக்கு பிரசங்கிக்க நான் தரிசனம் கொண்டிருக்கிறேன். பாரம்பரிய கட்டுக்கதைகளினால் ஆப்பிரிக்காவின் பெண்களாகிய நாங்கள் நூற்றாண்டுகளாக கட்டுகளில் இருக்கிறோம், எனவே மெய்யாகவே நான் என்னை கர்த்தரிடம் ஒப்படைக்க விரும்புகிறேன். போதகரே, நான் போய், காணாமல் போனவர்களிடத்தில் சாட்சி பகரும்படியாக வேதாகமங்கள், புத்தகங்கள், செய்திமடல்கள், தேவ செய்தி ஒலிநாடாக்கள் மற்றும் பல புத்தகங்களை வேண்டிக் கேட்கிறேன். இறுதியாக, வேத பாடத்திற்கான செய்திகள் மற்றும் பாடல்கள் ஒலிநாடாக்களை வேண்டுகிறேன்.

கிறிஸ்துவுக்குள் உங்களுடையவள்

எல்.எம். இஸோகா, சாம்பியா

---

அன்பான போதகர் டோனி அலமோ அவர்களே,

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே என்னுடைய சந்தோஷமான மற்றும் உண்மையான வாழ்த்துக்கள். உங்கள் வாழ்வுக்காகவும் மற்றும் உலகத்தின் மூலையெங்கும் சென்றடைந்து ஆத்துமாக்கள் இரட்சிப்படையும்படியாக திருவசனத்தை சிறந்த முறையில் பரப்ப அவர் திட்டமிட்ட விதத்திற்காக நான் தேவனைத் துதிக்கிறேன். போதகர் அலமோ, ஐயா, என்னுடைய உடன் பணியாளரால், நான் தீய காரியங்களிலிருந்து இரட்சிப்படைவதற்கு முன்பு அந்நிய வழிபாட்டுக்காரனாக இருந்தேன், மேலும் நான் தங்களுடைய செய்தியை செய்திமடலில் வாசித்தபோது அது என் இருதயத்தைக் குணப்படுத்தியது மற்றும் தேவன் என்னுடைய வாழ்வை மாற்றுகிறார் என்பதை உறுதியாய் அறிந்தேன் கர்த்தர் அவருடைய நீதியை நம்மிடத்தில் நிறுத்த வேண்டும் என்பதை . போதகர் அலமோ அவர்களே, நானும் எனது நண்பரும் சர்வ வல்லமையுள்ள தேவனின் வார்த்தைகளை வாசிக்க ஒன்று அல்லது இரண்டு ஆங்கில வேதாகமங்கள் தேவைப்படுகிறது. நம்முடைய தேவனின் சமாதானம் உங்களோடும் உங்கள் பரிசுத்த ஆவியோடும் இருப்பதாக. தங்களுடைய அன்பிற்காகவும் வேண்டுதல்களுக்குப் பதில் கொடுக்கிற சிந்தனையாளராக இருப்பதற்காகவும் நான் உங்களுக்கு மிக்க நன்றி செலுத்துகிறேன்.

நன்றி

G.N. கிட்வே, சாம்பியா

## மெக்ஸிகோ

மிகவும் பாராட்டுதலுக்குரிய போதகர் அலமோ அவர்களே,

சுவாரஸ்யமான செய்திகள் மற்றும் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள சாட்சிகள் அடங்கிய தங்களுடைய புத்தகம் நான் இருக்கும் இடம் வரைக்கும் கூடச் சென்றடைந்திருக்கிறது. கர்த்தர் அவருடைய இரட்சிப்பின் செய்தியை ஒவ்வொரு மனிதனிடத்திற்கும் கொண்டு சேர்க்கும்படியாக உங்களை வல்லமையாகப் பயன்படுத்துகிறார் என்பதில் சிறு சந்தேகமுமில்லை. கஞ்சா கடத்தலுக்காக நான் ஏழரை ஆண்டு காலம் சிறையில் இருக்கிறேன். கடந்த இரண்டு வருடங்களாக இங்கே இருப்பதனால் தேவன் அவரை என்னுடைய பரிதாபமான ஜீவியத்திற்கு விசேஷித்த விதத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார். நான், இந்த வருடம் விடுதலையாவேன் என்று நம்புகிறேன் மற்றும் தங்களுடைய *மேசியா* மற்றும் வேறு புத்தகங்களை அனுப்ப முடியுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன், அது என்னுடைய மகன்களின் இரட்சிப்பிற்கு உதவும்.

எம். ஏ. மன்குளோவா, கோகுய்லா, மெக்ஸிகோ

## தன்சானியா

அன்பான போதகர் அலமோ அவர்களே, தேவன் தந்தருளிய எனது அன்பிற்குரிய போதகரே,

பிதாவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், இரக்கமும், சமாதானமும் உங்கள் மீதும் உங்கள் ஊழியத்தின் மீதும் இருப்பதாக. 1994-லிருந்து நான் ஊழியம் புரிந்த என்னுடைய தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன், நான் தன்சானியாவின் முசோமாவில் சுவிசேஷகனாக இருக்கிறேன். தேசம் முழுவதிலும் மற்றும் தன்சானியாவிற்கு வெளியிலும் என்னுடைய ஊழியத்தை விரிவுபடுத்தும் பணியைச் செய்து கொண்டிருக்கிறேன். போதகரே, நான் உங்களுடைய குரலையோ பிரசங்கத்தையோ கேட்டதில்லை உங்கள் முகத்தையும் பார்த்ததில்லை, ஆனால் உங்கள் எழுத்துப்பணி மூலமாக உலகத்தின் பிரசங்கியாராகிய போதகர் டோனி அலமோவாகிய தாங்கள் எழுதிய “உலர்ந்த எலும்புகள்,” மேசியாவும் “தேவனின் தோட்டமும்” போன்ற அற்புதமான புத்தகங்களைப் பெற்று வாசித்திருக்கிறேன். இந்த புத்தகப் பணிகள் மூலமாக கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிற திருச்சபையைப் பற்றிய உங்களுடைய நிகழ்கால, மற்றும் எதிர்கால அக்கறையை நான் அறிந்து புரிந்துகொண்டேன். நானும் என்னுடைய உடன்பணியாளர்களும் மற்றும் தங்களுடைய புத்தகப் பணி மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட புதிய விசுவாசிகள் எல்லோரும் இணைந்து “விசுவாசிகள் சமுதாய திருச்சபை” என்று அழைக்கப்படுகிற ஒரு ஐக்கியத்தை உருவாக்கியிருக்கிறோம். கிழக்கு ஆப்பிரிக்காவில் முக்கியமாக தன்சானியாவில் தங்களுடைய ஊழியத்தை விரிவாக்க விரும்புகிறோம், மேலும் தொன்மையான கிராமங்களுக்குள் முன்னேறிச் சென்று விரிவாக்கவும் விரும்புகிறோம். போதகரே, எங்களுக்குத் தயவாய், உங்களுடைய உதவி தேவைப்படுகிறது. இந்த நற்செய்தி ஊழியம் மற்றும் தேசிய சுவிசேஷ பணியின் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒலிபெருக்கிகள், ஒரு மின் இயக்கி (ஜெனரேட்டர்) மற்றும் புதிய விசுவாசிகளுக்கு வேதாகமங்கள் மற்றும் போதனை புத்தகங்கள் வழங்க முடியுமா?. இதன் மூலம் கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசிர்வதிப்பார். தேவன்தாமே உங்களை ஆசிர்வதிப்பாராக மேலும் செய்த நற்காரியங்களுக்காக உங்கள் ஆவிக்குரிய வாழ்வை உயர்த்துவாராக. நாங்கள் உங்களை வாழ்த்துகிறோம் மேலும் உங்கள் நல்ல பதிலுக்காக வாஞ்சையோடு காத்திருக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள்,

ஒ.இ.எம். தன்சானியா, கிழக்கு ஆப்பிரிக்கா

# போதகர் அலமோவிற்கு வந்த கடிதங்கள்

## கானா

அன்பிற்குரிய கனிவான போதகரே,

நீங்கள் உங்களுடைய செய்திமடலை எனக்கு அனுப்பி வைத்ததால் நான் மிகவும் உற்சாகமாகிவிட்டேன். நான் கடந்த வாரத்தில் ஒரு பெட்டி நிறைய தங்களுடைய செய்திமடல்களைப் பெற்றுக்கொண்டேன். தேவனுடைய அன்பான ஊழியக்காரரே, அவைகளை வாசிப்பதால் ஜனங்கள் மிகவும் திருப்தியடைந்திருக்கிறார்கள். கிராமத்திலுள்ள எங்கள் நண்பர்கள்யாரிடம்எங்களதுபரிசுகளைப்பகிர்ந்துகொள்வோமோ மற்றும் யாரை ஜெபத்திற்காக சந்திப்போமோ அவர்கள் அவைகளைப் படிப்பதில் மிகவும் ஆர்வமாயிருந்தார்கள். மற்றும் சில ஆத்துமாக்கள் மற்றவர்களிடமிருந்த மடலிலிருந்து வாசித்து எழுப்புதல் அடைந்திருக்கிறார்கள். நாங்கள் மிகவும் மகிழ்ச்சியாயிருக்கிறோம் மேலும் நற்செய்தி காரியங்களை எங்களுக்கு அனுப்பி வைக்கும்படியாகவும் தங்களுடைய அஞ்சல் பட்டியலில் எங்களையும் சேர்க்கும்படியாகவும் வேண்டுகிறோம். எங்களுக்குச் சில வேதாகமங்களும் தங்களுடைய புத்தகங்களும் தேவைப்படுகிறது. மற்றும் உங்களுடைய ஊழியத்தின் போதனைகளைப் பெற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடைவோம். உங்களுக்காகவும் உங்களுடைய அன்பான மகன் சீயோன் மற்றும் தங்களோடு தங்களுடைய ஊழியத்தில் பணியாற்றும் எல்லோருக்காகவும் நாங்கள் ஜெபிக்கிறோம். கர்த்தர் உங்களை அபரிவிதமாக ஆசிர்வதிப்பாராக. முதலில் எவ்விதத்திலேனும் எங்களுக்காக ஜெபியுங்கள். ஜெபம்தான் சர்வ வல்லமையுள்ள தேவனின் பலத்த கரத்தை அசைக்கும்படியாக கிரியைசெய்கிறது. ஜெபமில்லாமல் நாம் வெறுமென “நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்கின்றவர்க ளாக” மட்டுமே இருக்கிறோம். கர்த்தருடைய பணிக்காக தூரத்து கிராமங்களுக்கும் மலைகளுக்கும் செல்கிற எங்களுடைய மாணவ தன்னார்வ தொண்டர்களுக்காவும் தயவுகூர்ந்து ஜெபியுங்கள். அவர்களிடம் தைரியமும் விசுவாசமும் அன்பும் காணும்படியாக ஜெபியுங்கள். கர்த்தருடைய ஆவியானவர் உங்களுடைய வழிகாட்டியும் தலைவருமாக இருப்பாராக. உங்களை அபரிவிதமாக ஆசிர்வதிக்க அவர் உங்களை நினைவுகூர்வாராக. நீங்கள் நீண்ட ஆயுளையும் சமாதானத்தையும் செழிப்பையும் பெற்றிருக்கும்படியாக நாங்கள் தேவனிடம் வேண்டுகிறோம்.

கிறிஸ்துவின் அன்பில் உங்களை நேசிக்கும்,
Loving you in Christ’s love,
ஏ.எஸ். அக்ரா, கானா

## டோகோ

கிறிஸ்துவுக்குள் பிரியமானவரே,

உங்கள் கடிதத்தைப் பெறுவதில் மகிழ்ச்சியாயிருக்கிறோம். நீங்கள் அனுப்பிய புத்தகங்களால் சந்தோஷமாயிருக்கிறோம். தேவன் நிச்சயமாகவே உங்கள் எழுத்துக்கள் மூலம் செயல்படுகிறார். உங்களுடைய சிற்றேடுகள் மூலமாக 15 ஆத்துமாக்கள் கிறிஸ்துவுக்குள் வரும்படியாக நாங்கள் ஆதாயம் செய்தோம், மேலும் உங்கள் அனைவரையும் தேவன் அபரிதமாக ஆசிர்வதிக்க வேண்டுமென்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

புதிதாக மாறியவர்களுக்காக சிடி மற்றும் வேதாகமங்களும் வேண்டும். இப்பொழுது காரியங்கள் இருக்கிற நிலமையில் எங்களால் அவைகளை வாங்க முடியவில்லை. டோகோ மிகவும் ஏழ்மையான தேசம்.

சிடி வேதாகமங்களையும் உயிர்த்தெழுந்த பண்டிகைக்குள் (ஈஸ்டர் ஆராதனை) பெற்றுவிடுவோம் என எதிர்பார்க்கிறேன். இயேசுவின் நாமத்தினாலே தொடர்ந்து ஆசிர்வதிக்கப்பட்டிருங்கள், ஆமென்.

ஆயர் ஹென்றி ஜேம்ஸ் லோம், டோகோ

## நைஜீரியா

அன்பான போதகரே,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துக்கள். ஆமென். தாங்கள் அனுப்பிய கடைசி செய்திமடல்கள் வழங்கப்பட்டாகிவிட்டது, மேலும் அது ஜனங்களின் வாழ்க்கையில் கொண்டுவந்திருக்கும் மாற்றத்தைக் கண்டு வியக்கிறேன், மேலும் அவர்கள் முழு மனதோடு கர்த்தருக்குப் பணியாற்றுவதாக உறுதியளித்துள்ளார்கள், சிலர் உங்களுக்கு எழுதுவதாகவும் உறுதியளித்துள்ளார்கள். *மேசியா* தலைப்பிடப்பட்ட புத்தகம் 25 பிரதிகளும், பலதரப்பட்ட 150 செய்திமடல்களையும், சில வேதாகமங்களையும், நண்பர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிந்துகொள்ள விரும்புகிற பிறருக்கும் என்னுடைய சுவிசேஷ விநியோகத்திற்கு உதவுகிற புத்தகங்களும் வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். நைஜீரியாவிலிருக்கிற உங்களுடைய ஊழியக்காரர்களில் ஒருவராக இருக்க நான் உண்மையிலேயே விரும்புகிறேன். அது எப்படி என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். கர்த்தருடைய கரம் உங்கள் வாழ்வின் மீதும் ஊழியத்தின் மீதும் இருப்பதைப் பார்த்திருக்கிறேன், மேலும் உங்கள் வாழ்வின் மீதும் ஊழியத்தின் மீதும் இருக்கிற அபிஷேகத்திற்குள்ளும் கிருபைக்குள்ளும் நானும் வர விரும்புகிறேன். உங்களிடமிருந்து கேட்பதிலும் பெற்றுக்கொள்வதிலும் வாஞ்சையோடு காத்திருக்கிறேன்.

கிறிஸ்துவுக்குள் உங்களுடையவன்,
ஆர். எம். போர்ட் ஹர்கோர்ட், நைஜீரியா

## கலிஃபோர்னியா

அன்பான போதகர் அலமோ அவர்களே,

பரிசுத்த ஆவியின் பலத்தினாலும் மற்றும் கர்த்தருடைய கவசமாக முழு போராட்ட கருவியாக (எபே 6:10-17) நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். சமீபத்தில், ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் கர்த்தரின் சேனையிலுள்ள ஒரு சகோதரரோடு கூடிய ஐக்கியத்தின் வாயிலாக வேதாகமத்தைக் குறித்த குறிப்பிட்ட உண்மைகள் மற்றும் இரகசியங்கள் பரிசுத்த ஆவியால் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவருடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களை கர்த்தர் தற்பொழுது ஆயத்தம் பண்ணிக்கொண்டிருக்கிறார் என்பதை நான் அறிகிறேன், மேலும் தங்களுடைய வெளியீட்டிலுள்ள ஒரு பக்கத்தைக் கடந்து வந்தேன். குறிப்பிட்ட சத்தியத்தை நான் அறிய வேண்டிய முக்கியமான சமயத்தில்தான் கர்த்தர் உங்களுடைய புத்தகத்தை என்னிடத்தில் கொண்டுவந்தார் என்பதை நான் சொல்லியே ஆக வேண்டும். உங்கள் ஊழியத்தால் நான் மிகவும் ஈர்க்கப்பட்டிருக்கிறேன். தீர்க்கதரிசனத்தின் எல்லாவிதமான சுவையான அம்சங்களை மட்டுமே எனக்குச் சொன்ன இனிப்பு பூசப்படாத மூல சத்தியம் நீங்கள். தயவுகூர்ந்து தங்களுடைய உறுப்பினர்களின் கணக்கெடுப்பில் என்னையும் சேர்த்துக்கொள்ளுங்கள் மேலும் தங்களுடைய அஞ்சல் பட்டியலில் என்னையும் சேருங்கள், அதனால் சத்தியமென்னும் தேவனுடைய பட்டயத்தை ஆயுதமாக்கி நானும் பரிசுத்த ஆவியில் வளர்வேன். நான் மாநில சிறைச்சாலையில் இருக்கிறேன், எனவே தயவுசெய்து கடின அட்டை கொண்ட புத்தகங்கள் அனுப்ப வேண்டாம். என்னால் நிதி எதுவும் நன்கொடை செய்ய முடியவில்லை, ஆனால் உங்கள் வல்லமையான ஊழியம் செழிக்க என்னுடைய ஜெபம் உங்கள் முழு ஸ்தாபனத்துடன் இருக்கிறது.

தங்கள் உண்மையுள்ள,
பி.எல்., கொர்கொரான், கலிஃபோர்னியா

## டோனி அலமோவின் சாட்சி

(பக்கம் 3 லிருந்து தொடர்கிறது)

ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்."[32]

நீங்கள் என்னைப்போல இருந்தால் ஒருபோதும் தண்டிக்கப்பட மாட்டீர்கள், ஆனால் இரட்சிக்கப்படுவீர்கள், அப்பொழுது இந்த ஜெபத்தை கர்த்தரிடம் ஏறெடுங்கள்:

**என்னுடைய தேவனே என் ஆண்டவரே, நான் ஒரு பாவி என் ஆத்துமாமீது இரக்கம்வையும்.[33] இயேசுகிறிஸ்துவே ஜீவனுள்ள தேவனின் குமாரன் என்பதை நான் விசுவாசிக்கிறேன்.[34] என்னுடைய முந்தைய பாவங்களை மன்னிக்கும்படியாக அவர் சிலுவையில் மரித்து விலையேறப்பெற்ற இரத்தத்தைச் சிந்தினார் என்பதையும் விசுவாசிக்கிறேன்.[35] பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்பதையும் விசுவாசிக்கிறேன்,[36] எனவே அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து என்னுடைய அறிக்கையையும் இந்த ஜெபத்தையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.[37] நான், இதயத்தின் கதவைத் திறந்து ஆண்டவர் இயேசுவே உம்மை நான் என் இதயத்தினுள் அழைக்கிறேன்.[38] கல்வாரியிலே என்னுடைய இடத்திலே நீர் சிந்திய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் என்னுடைய அசுத்தமான பாவங்கள் அனைத்தையும் கழுவியருளும்.[39] கர்த்தராகிய இயேசுவே என்னைப் புறம்பே தள்ளமாட்டீர்; என் பாவங்களை மன்னித்து எனது ஆத்துமாவை மீட்டருள்வீர். நான் அதை அறிவேன் ஏனென்றால் உம்முடைய வார்த்தையான பரிசுத்த வேதாகமம் அப்படிச் சொல்கிறது.[40] நீர் ஒருவனையும் புறம்பே தள்ளுவதில்லை என்று உம்முடைய வார்த்தை சொல்கிறது, அதில் நானும் அடங்கியிருக்கிறேன்.[41] ஆகையால், நீர் எனக்குச் செவிகொடுத்திருக்கிறீர் என்பதை அறிவேன், மற்றும் நீர் எனக்குப் பதிலளித்தீர் என்பதையும் நான் அறிவேன்.[42] என்னுடைய ஆத்துமாவை இரட்சித்ததற்காக இயேசு ஆண்டவரே, நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன் மேலும் நீர் கட்டளையிட்டவைகளைச் செய்தும் இனிமேல் பாவம்செய்யாமலும்என்னுடையநன்றியைக்காண்பிப்பேன்.[43]**

இரட்சிப்பிற்குப் பிறகு, ஜலத்திலே முழுவதுமாக மூழ்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் எடுங்கள் என்று இயேசு கூறினார் .[44] கிங் ஜேம்ஸ் பதிப்பு வேதாகமத்தைக் கவனமாகப் படித்து அது சொல்வதைச் செய்யுங்கள்.[45]

உங்கள் இரட்சிப்பைக் குறித்து பிறரிடம் சொல்ல வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். போதகர் டோனி அலமோ அவர்களின் சுவிசேஷ பிரசுரங்களைக் கொடுக்கிறவர்களாக மாறலாம். பிரசுரங்களை நாங்கள் உங்களுக்கு இலவசமாக அனுப்பி வைப்போம். இன்னும் அதிகப்படியான தகவலுக்கு எங்களை அழையுங்கள் அல்லது மின்னஞ்சல் செய்யுங்கள். இந்தச் செய்தியைப் பிறரோடும் பகிர்ந்து கொள்ளுங்கள்.

இந்த உலகம் இரட்சிப்படைய நீங்கள் விரும்பினால், இயேசு கட்டளையிட்டது போல, தேவனை, அவருடைய தசமபாகத்திலும் காணிக்கையிலும் வஞ்சிக்காதிருங்கள். தேவன் சொன்னார், "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப்பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் [இந்த முழு உலகமும்] என்னை வஞ்சித்தீர்கள். என் ஆலயத்தில் [இரட்சிப்படைந்த ஆத்துமாக்கள்] ஆகாரம் [ஆவிக்குரிய ஆகாரம்] உண்டாயிருக்கும்படித்தசமபாகங்களையெல்லாம் [உங்கள்மொத்த வருமானத்தில் பத்தில் ஒரு பங்கு] பண்டகசாலையிலே கொண்டு வாருங்கள்; அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசிர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன்;அவைகள்உங்கள்நிலத்தின்பலனைஅழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள்; தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்" (மல்கியா 3:8-12).

---

**33** மத். 26:63-64, 27:54, லூக்கா 1:30-33, யோவான் 9:35-37, ரோமர் 1:3-4 **35** அப். 4:12, 20:28, ரோமர் 3:25, 1யோவான் 1:7, வெளி. 5:9 **36** சங். 16:9-10, மத். 28:5-7, மாற்கு 16:9,12,14, யோவான் 2:19, 21, 10:17-18, 11:25, அப். 2:24, 3:15, ரோமர் 8:11, 1கொரி. 15:3-7 **37** லூக்கா 22:69, அப். 2:25-36, எபி. 10:12-13 **38** 1கொரி. 3:16, வெளி. 3:20 **39** எபே. 2:13-22, எபி. 9:22, 13:12, 20-21, 1யோவான் 1:7, வெளி. 1:5, 7:14 **40** மத். 26:28, அப். 2:21, 4:12, எபே. 1:7, கொலோ. 1:14 **41** மத். 21:22, யோவான் 6:35, 37-40, ரோமர் 10:13 **42** எபி. 11:6 **43** யோவான் 5:14, 8:11, ரோமர் 6:4, 1கொரி. 15:10, வெளி. 7:14, 22:14 **44** மத். 28:18-20, யோவான் 3:5, அப். 2:38, 19:3-5 **45** உபா. 4:29, 13:4, 26:16, யோசுவா 1:8, 22:5, 2தீமோ. 2:15, 3:14-17, யாக்கோபு 1:22-25, வெளி. 3:18

*மேலும் விபரங்களுக்கு அல்லது ஆர்வமாயிருக்கிற பிற தலைப்புகளிலுள்ள புத்தகங்களுக்கு தயவுகூர்ந்து எங்களை தொடர்பு கொள்ளவும்.*

**Tony Alamo, World Pastor, Tony Alamo Christian Ministries Worldwide • P.O. Box 2948, Hollywood, CA 90078**
**இருபத்து நான்கு மணிநேர ஜெப மற்றும் தகவல் தொடர்பு எண்: +1 (661) 252-5686 • ஃபேக்ஸ +1 (661) 252-4362**
**www.alamoministries.com • info@alamoministries.com**

*டோனி அலமோ உலகளாவிய கிறிஸ்தவ ஊழியங்களானது முழு உள்ளத்தோடும் ஆத்துமாவோடும் மனதோடும் மற்றும் முழு பலத்தோடும் கர்த்தருக்கு உண்மையிலேயே ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் எங்களுடைய அமெரிக்க ஐக்கிய பகுதியில் இருக்கிற யாவரும் வாழ்வதற்குத் தேவையான பொருட்களோடு கூடிய ஒரு இடத்தை வழங்குகிறது.*

நியு யார்க் நகரத்தில் ஒவ்வொரு செவ்வாய் கிழமையும் மாலை 8 மணிக்கு மற்றும் பிற இடங்களில் தினமும் இரவிலும் ஆராதனைகள் நடத்தப்படுகிறது. தகவலுக்கு தயவுகூர்ந்து +1 (908) 937-5723 ஐ அழையுங்கள். ஒவ்வொரு ஆராதனைக்குப் பிறகும் உணவு பரிமாறப்படுகிறது.

333க்கு மேலான தீர்க்கதரிசனங்களில் வெளிப்படுத்தப்பட்ட பழைய ஏற்பாட்டிலிருந்து கிறிஸ்துவைக் வெளிப்படுத்துகிற போதகர் அலமோவினுடைய புத்தகமான மேசியாவைக் கேளுங்கள்.

*போதகர் அலமோ அவர்களுடைய புத்தகங்களை விநியோகிக்கிறவர்களாகி ஆத்துமாக்களை அறுவடை செய்யும் பணியாளராகுங்கள்.*

***எங்களுடைய எல்லாப் புத்தகங்களும் ஒலிவடிவ செய்திகளும் அனுப்புவது உட்பட்ட செலவுகளும் இலவசமே.அவைகளுக்காக உங்களிடம் யாராவது கட்டணம் வசூலிக்க முற்பட்டால், தயவுகூர்ந்து கலெக்ட் நிறுவனத்தை இந்த எண்ணில் +1 (661) 252-5686 அழைக்கவும்.***

இந்த புத்தகம் இரட்சிப்பின் மெய்யான திட்டத்தைக் கொண்டிருக்கிறது (அப். 4:12).
இதைத் தூர வீசி எறியாதீர்கள், வேறு யாரிடமாவது கொடுக்கவும்.

பிற நாடுகளில் இருக்கிறவர்கள் தங்கள் சொந்த மொழியில் இந்தப் புத்தகத்தை மொழிபெயர்க்க நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம். நீங்கள் அச்சிட்டால், தயவுகூர்ந்து இந்தக் காப்புரிமையையும் பதிவையும் சேர்த்துக்கொள்ளுங்கள்:

© காப்புரிமை நவம்பர் 1995, 2012, 2013, 2014, 2015 எல்லா உரிமையும் உலக போதகர் டோனி அலமோவிற்கே உரித்தாகும் ® பதிவு செய்யப்பட்டது நவம்பர் 1995, 2012, 2013, 2014, 2015

TAMIL—Vol. 06000—*Tony Alamo's Testimony—Dry Bones*